


21. 02. 2026

## தலைப்புச் செய்திகள்

- நாட்டின் வளர்ச்சிக்கு பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு மிகவும் இன்றியமையாதது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் கூறியுள்ளார்.

- புதுதில்லி செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் பல்வேறு தொழில்நுட்பங்களுக்கு சிறந்த தீர்வுகள் வழங்கப்பட்டதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

- மதுரை மாவட்டத்தில் ஆயிரத்து 800 கோடி ரூபாய்க்கும் அதிகமான பல்வேறு முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

- தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்று பி.ஜே.பி. மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

- புதுதில்லியில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதிச்சுற்றுக்கு இந்தியாவின் கலியாண்டா

பூனாச்சா – தாய்லாந்தின் ஐசாரோ இணை முன்னேறியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖❖

சி.பி. ராதா கிருஷ்ணன்

நாட்டின் வளர்ச்சிக்கு பெரு நிறுவனங்கள், சமூக பொறுப்புணர்வு மிகவும் இன்றியமையாதது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பெருநிறுவனங்களின் சமூக பொறுப்பணர்வு உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், பொதுகல்வி முறைகள், ஆரம்ப சுகாதாரம், சமூக தேவைகளுக்கு ஏற்ப திறன் மேம்பாட்டு ஒருங்கிணைப்பிற்கு இது தேவை என்றும் குறிப்பிட்டார்.

இதன்மூலம் ஆக்கப்பூர்வமான மாற்றங்கள் உருவாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 10 ஆண்டுகளில் சீர்த்திருத்தங்கள் துரித கட்டமைப்பு விரிவாக்கம், மின்னணு தொடர்புகள், நிதி உள்ளடக்கம், வறுமையிலிருந்து மக்களை மீட்டெடுத்தல் போன்றவை சிறப்பாக செயல்படுத்தப் பட்டதாக எடுத்துரைத்தார்.

உலகளாவிய பொருளாதாரத்தில் நம் நாடு 4-வது பெரிய பொருளாதார தேசமாக உருவெடுத்து இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரேசில் அதிபர் லூயி இனாஷியோ உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை புதுதில்லியில் இன்று மேற்கொண்டார்.

பரஸ்பரம், பிராந்திய சர்வதேச நலன்கள் குறித்த கருத்துக்கள் இதில் பரிமாறப்பட்டன.

சீர்த்திருத்தங்களுடன் கூடிய பன்முகத் தன்மை, உலகளாவிய ஆளுமை, தென்னாடுகளின் பிரச்சனை உள்ளிட்டவை குறித்தும் இதில் ஆராயப்பட்டது.

இந்தியாவின் நட்பு நாடாக விளங்கும் பிரேசிலுடன் வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, எரிசக்தி, அறிவியல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் இருதலைவர்களும் விவாதித்தனர்.

முன்னதாக குடியரசு தலைவர் மாளிகைக்கு வந்த பிரேசில் அதிபருக்கு பாரம்பரிய சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

மன் கி பாத்

பிரதமர் திரு. நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 131-வது முறையாக நாளைகாலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

அனைத்து வானொலி நிலையங்கள், தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூ-டியூப் அலைவரிசை, mygov இணையதளம், news on air செயலியில் இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பாகும்.

பிரதமர் உரையின் தமிழாக்கம் காலை 11.30 மணிக்கும் இரவு
8 மணிக்கும் இடம்பெறும்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

அஷ்விணி வைஷ்ணவ்

புதுதில்லி செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் பல்வேறு தொழில்நுட்பங்களுக்கு சிறப்பான தீர்வுகள் வழங்கப்பட்டதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டு வளாகத்தை இன்று பார்வையிட்ட அமைச்சர், இம்மாநாட்டில் இளையோரின் ஆர்வத்தையும், எழுச்சியையும் எடுத்துரைத்தார்.

காங்கிரஸ் கட்சியினரின் ஆர்ப்பாட்டம் தரம் தாழ்ந்த அரசியல் என்றும், அவர்களின் செயல்பாடு கண்டணத்திற்குரியது என்றும் குறிப்பிட்டார்.

இதனிடையே பொதுமக்களின் கோரிக்கை ஏற்று புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெறும் இக்கண்காட்சி இன்று ஒருநாள் நீட்டிக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

சுதான்ஷு திரிவேதி

புதுதில்லி பாரத் மண்டபத்தில் செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு நடைபெற்ற போது அவ்வாளகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் கட்சியின் செயல்பாடு ஆட்சேபத்திற்கு உரியது என்று பி.ஜே.பி. செய்தித் தொடர்பாளர் திரு. சுதான்ஷு திரிவேதி குறைகூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்திாயளர்களிடம் பேசிய அவர், காங்கிரசின் இச்செயல்பாடு, நாட்டு மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளதாக குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு மாநாடு அனைவராலும், பெருமிதமாக கருதப்படும் நிலையில் காங்கிரஸ் கட்சியின் செயல்பாடு முறைகேடானது என்றும் அவர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஜே.பி. நட்டா

நாட்டின் தடுப்பூசி திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் டெட்டனஸ், டிப்தீரியா நோய்களுக்கான தடுப்பூசியை மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா இமாச்சல பிரதேசம் கசௌளி மத்திய ஆராய்ச்சி நிறுவனத்தில் இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் உள்நாட்டு தடுப்பு மருந்துகள் திட்டத்திற்கு இந்நிறுவனம் பெரிய அளவில் பங்களிப்பு வழங்கியுள்ளதாக குறிப்பிட்டார்.

புதிய தடுப்பு மருந்துகளை கண்டுபிடித்து அவற்றை மேம்படுத்தியதில் பல்வேறு சாதனைகள் புரிந்துள்ளதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

டெட்டனஸ், டிப்தீரியா நோய்களுக்கு உள்நாட்டிலேயே தடுப்பூசி உருவாக்கியதன் மூலம் பிரதமரின் சுயசார்பு பாரத தொலைநோக்கு பார்வை பூர்த்தியாகி உள்ளதாக கூறினார்.

உலகத்தின் மருந்தியல் மையமாக இந்தியா உருவெடுத்து உள்ளதாக பெருமிதம் தெரிவித்த திரு. ஜே.பி.நட்டா, சர்வதேச தடுப்பு மருந்து திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில் 50

லட்சத்து 50 ஆயிரம் டோஸ் சொட்டு மருந்துகளை வரும் ஏப்ரலுக்குள் உலக நாடுகளுக்கு இந்தியா விநியோகிக்கும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

கோவா கடல்சார் மாநாடு

கடல்சார் ஒத்துழைப்பின் அவசியத்தை கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே. திரிபாதி வலியுறுத்தியுள்ளார்.

கோவா வெரம் கடற்படை கல்லூரியில் ஐந்தாவது கடல்சார் மாநாடு 2026-ஐ இன்று தொடங்கி வைத்து உரையாற்றிய அவர், விசாகப்பட்டினத்தில் அண்மையில் 74 நாடுகளின் சர்வதேச கப்பல்களட அணிவகுப்பின் மூலம் கடல் பாதுகாப்பில் உலகளாவிய நாடுகளின் பங்களிப்பை எடுத்துரைத்தார்.

நம் நாட்டின் 95 சதவிகித வர்த்தகம் கடல் வாயிலாக நடைபெறுவதை சுட்டிக்காட்டிய அவர், இந்திய பெருங்கடலின் இரண்டாவது கடல்சார் பாதுகாப்பு மேம்பாட்டு திட்டம் விரைவில் அறிமுகம் செய்யப்படும் என்றார்.

இப்பிராந்தியத்தின் சாவல்களை எதிர்கொள்வது குறித்து விவாதிக்க இம்மாநாடு சிறந்த தளமாக திகழ்கிறது என்றார்.

இந்திய கடற்படையின் சிறப்பான நடவடிக்கள் குறித்து மகிழ்ச்சி தெரிவித்த திரு. தினேஷ் கே. திரிபாதி, இம்மாநாட்டின் பல்வேறு தேசங்களில் எழுச்சிமிகு பங்களிப்பையும் பாராட்டியுள்ளார்.

பெருங்கடல் பகுதிகள் – கடல்சார் சவால்களை எதிர்கொள்வது – ஆக்கப்பூர்வமான முன்னோடி முயற்சிகள் என்ற கருப்பொருளுடன் இம்மாநாடு நடைபெறுகிறது.

போதைப்பொருள் கடத்தல், பாதுகாப்பு அச்சுறுத்தல், சட்டவிரோதமாக மீன் பிடித்தல், அண்டை நாடுகள் உடனான கடல்சார் ஒத்துழைப்பு உள்ளிட்டவை குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

மாலத்தீவு உள்ளிட்ட 14 நட்புறவு நாடுகளின் கடற்படை உயரதிகாரிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

நாசா

அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் வரும் 6-ம் தேதி விண்வெளி வீரர்களுடன் கூடிய விண்கலத்தை நிலவிற்கு அனுப்ப தயாராகி உள்ளது.

இதற்கான முதற்கட்ட பரிசோதனைகளில் காணப்பட்ட தொழில்நுட்ப கோளாறுகள் சரி செய்யப்பட்டு, மீண்டும் நடத்தப்பட்ட சோதனை முயற்சிகள், வெற்றியடைந்ததை தொடர்ந்து இந்நடவடிக்கை.

நாசாவின் நிலவு ஆய்வு திட்டப்பணிகளுக்கு இந்த விண்கலத்திட்டம் பெரிதும் பயனளிப்பதோடு, நிலவில் மனிதர்கள் தங்குவது குறித்த சாத்தியக் கூறுகளை ஆராயவும், இது பெரிதும் வழிகோலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விண்கல திட்டப் பயணத்தில் பாதுகாப்பே முதன்மையானது என தெளிவுபடுத்தியுள்ள நாசா இதற்கான உந்து சக்தி முறைகள், உயிர் பாதுகாப்பு செயல்பாட்டுத்

திட்டங்கள், விண்கலத்தின் தயார்நிலை ஆகியவை குறித்து துல்லிய கண்காணிப்புகளை மேற்கொண்டு வருகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

தீவிரவாத அச்சுறுத்தல்

தீவிரவாத அச்சுறுத்தல் நிகழக்கூடும் என்ற மத்திய புலனாய்வு முகமைகளின் எச்சரிக்கையை தொடர்ந்து தலைநகர் டெல்லியில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.

செங்கோட்டை சாந்தினி சௌக் பகுதிகளில் உயர் கண்காணிப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப் பட்டுள்ளன

பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்டு செயல்படும் லக்ஷர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பு, நாட்டின் முக்கிய வழிப்பாட்டுத் தலங்களில் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற தகவல் கிடைத்ததன் பேரில் இந்நடவடிக்கை.

அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் மக்கள் பீதியடைய தேவையில்லை என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

மதுரை மாவட்டத்தில் ஆயிரத்து 800 கோடி ரூபாய்க்கும் அதிகமான பல்வேறு முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

867 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டம், தமுக்கம் முதல் நெல்பேட்டை – அண்ணாசிலை இடையிலான

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மேம்பாலம், மறுசீரமைக்கப்பட்ட வண்டியூர் பூங்கா உள்ளிட்டவை இதில் அடங்கும்.

சிவகங்கை மாவட்டம் சூரக்குளத்தில் ஒருகோடி ரூபாய் மதிப்பில் மருது சகோதரர்களின் திருவுருவச் சிலையையும் முதலமைச்சர் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக பி.ஜே.பி. தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்று பி.ஜே.பி. மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தமிழக மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதாக குறிப்பிட்டார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடங்கப்பட்டு கூட்டணி கட்சிகளுடன் கலந்தாலோசித்து இறுதி முடிவு எட்டப்படும் என்றார்.

தி.மு.க. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று குறை கூறிய அவர், மீண்டும் பொய்யான வாக்குறுதிகளை அக்கட்சி வழங்கி வருவதாக குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கேள்வி குறியாகி உள்ளதாக குற்றம் சாட்டிய அவர், மத்திய அரசின் அனைத்து நிதிகளையும் பெற்றுக்கொண்டு, நிதி வழங்கவில்லை என்று திமுக கூறுவதாக தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

எல்.முருகன்

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் நாமக்கல் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோவிலில் இன்று சுவாமி தரிசனம் மேற்கொண்டார்.

தொடர்ந்து கட்சி சார்ந்த நிகழ்ச்சிகளில் அமைச்சர் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம்

தமிழ்நாட்டில் திமுக அரசு மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி உள்ளதாக மாநில வேளாண் அமைச்சர்
திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற அரசு விழாவில் 13 புதிய நகர பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்ததுடன், 4 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

உலக தாய்மொழி தினம்

உலக தாய்மொழி தினம் இன்று கடைபிடிக்கப் படுகிறது.

"பன்மொழிக் கல்வியில் இளையோரின் குரல்" என்ற இந்த ஆண்டின் கருப்பொருளுடன் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இந்நாளையொட்டி முதலமைச்சர் வெளியிட்ட வாழ்த்து செய்தியில் செம்மொழியாம் நம் தமிழ்மொழியை பாதுகாத்து அடுத்த தலைமுறைகளுக்கு கொண்டுசெல்லல வேண்டியது நம் அனைவரின் கடமை என கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

மலைரயில்

உதகை, மேட்டுப்பாளையம், குன்னூர் மலைரயில் கட்டணம் இன்றுமுதல் 5 சதவிகிதம் உயர்த்தப் பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖

தென்காசி – வாய்ஸ்

தென்காசி மாவட்டம் அருள்மிகு காசி விஸ்வநாதர் ஆலய மாசித்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

... வாய்ஸ் ...

காஞ்சிபுரம் அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோவில்இ திருச்செந்தூர்இ திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில்களிலும் மாசி பிரம்மோற்சவ விழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

புதுதில்லியில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதிச்சுற்றுக்கு இந்தியாவின் கலியாண்டா பூனாச்சா – தாய்லாந்தின் ஐசாரோ இணை முன்னேறியுள்ளது.

அரையிறுதியில் இந்த இணை – தென்கொரியாவின் Ji Sung Nam, பின்லாந்தின் Patrik Niklas- இணையை இன்று தோற்கடித்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖